# கடைசிகால தீர்க்கதரிசனங்கள்

## 1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

ஒரு வார்த்தையின் மூலமாக வியாதியஸ்தர் சுகமடைவார்கள்; குருடர்கள் காண்பார்கள்; செவிடர்கள் கேட்பார்கள்; மரித்தவர்கள் உயிரோடு எழும்புவார்கள்; தேவனுடைய வல்லமையானது ஜீவனுள்ள தேவனுடைய சபையைக் கொண்டு உலகத்தை அசைக்கும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

**குறிப்பு:** *தீர்க்கதரிசி உரைத்த இந்த தீர்க்கதரிசனம் ஏற்கனவே நிறைவேறி விட்டதா, அல்லது தற்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறதா, அல்லது இனிமேல்தான் நிறைவேறப் போகிறதா என்பது எனக்குத் தெரியாது. எனவே இந்த தீர்க்கதரிசனத்தை வைத்து எந்த உபதேசத்தையும் உண்டாக்கிக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

---

## சகோ.வில்லியம் பிரன்ஹாம்

---

# செய்தி: 59-11-23 இந்த மலையைப் பார்த்துப் பேசு

---

123. **இப்பொழுது ஜீவனுள்ள தேவனுடைய சபையானது, முழு உலகத்தையும் அசைக்கப்போகிற ஒரு மண்டலத்திற்குள் (sphere) போய்க் கொண்டிருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன்.**

நசரேயனாகிய இயேசுவின் (Jesus of Nazareth) நாட்கள் முதற்கொண்டு, ஒரு

மனிதனுக்கு (சம்பவிக்கிறது) இதுவே முதல்முறையாகும்.

'நீங்கள் விரும்புகிற எதையும் கேளுங் கள், அது உங்களுக்குக் கொடுக்கப்படும். நீங்கள் விரும்புகிற எதுவும்.' இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் காணவில்லையா?

ஒ, அது வெகு சீக்கிரத்தில் சம்பவிக்கப் போகிறது.

இந்தக் கூட்டத்தில் அது சம்பவிக்கும்படி நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அது இப்பொழுதே சம்பவிக்க நான் வாஞ்சிக்கிறேன்.

**அந்த அபிஷேகமானது ஜீவனுள்ள தேவ னுடைய முழு சபையின் மேலும் விழும், அவள் அணிவகுத்துச் செல்லும் ஒரு**

**பலம்பொருந்திய இராணுவத்தைப்போல, தன்னுடைய காலூன்றி எழுந்து நிற்பாள்.**

**ஒரு வார்த்தையின் மூலமாக வியாதியஸ்தர் சுகமடைவார்கள்; குருடர்கள் காண்பார்கள்; செவிடர்கள் கேட்பார்கள்; மரித்தவர்கள் உயிரோடு எழும்புவார்கள்; தேவனுடைய வல்லமையானது ஜீவனுள்ள தேவனுடைய சபையைக் கொண்டு உலகத்தை அசைக்கும்.**

**நாம் இப்பொழுது அதை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிக்கிறோம்.**

**அது அதிசீக்கிரமாய் சம்பவிக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன்.**

அது மிகச்சரியாக அதேவிதமாகவே சம்பவிக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

அது தேவனுடைய சபையின் மேல் சீக்கிரமாக விழப்போகிறது என்று நான் விசுவாசிக்கிறேன்.

**உலகத்தை அசைக்கும் ஒரு எழுப்புதல் ஆரம்பிக்கப் போகிறது. நான் அதை விசுவாசிக்கிறேன்.**

124. வானங்களையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தருடைய ஊழியக்காரனாகிய நான், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், இப்பொழுது உங்களுக்கு முன்பாக இங்கே நின்று கொண்டிருக்கிறேன், அந்த வார்த்தைகள் உண்மையானவைகளாகும். ஓ, நாம் ஏதோவொன்றின் அருகாமையில் இருக்கிறோம். என்னுடைய இருதயம் எதிர்பார்ப்போடு காத்துக் கொண்டிருக் கிறது. என்னால் என்னுடைய ஓட்டல் அறையில் கூட இளைப்பாற முடிய வில்லை. கடந்த இரவில் என்னால்

உறங்கவே முடியவில்லை. அது ஒருபோதும் என்னை விட்டு அகல வில்லை; அது... என்னால் இங்கே வெளியே சாலையில் வரும் போதும் உறங்க முடியவில்லை; நான் இரவில் ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று மணி நேரங்கள் உறங்கவில்லை. என்னால் சற்றும் இளைப்பாற முடியவில்லை, ஏனென்றால் ஏதோவொன்று சம்பவிக்கப் போகிறது என்று எனக்குத் தெரியும். நாம் இங்கே நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக நம்முடைய தேவன் காட்சியில் அசைவாடப் (move on the scene) போகிறார்.

தேவனே! அதைக் காண நான் உயிர் வாழ்வேனாக என்பதே என் விண்ணப்பம். சகோதரனே, அதை என் கைகளால் தொட்டு உணரக்கூடிய அளவுக்கு அது அருகாமையில் உள்ளது. அது இங்கேயேயுள்ளது. அதை காண நான் ஆவலாயுள்ளேன். வீதியில் நடந்து சென்று, நான் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாயிருந்த ஒருவன் படுத்துக்கிடப்பதைக் கண்டு, “வெள்ளியும், பொன்னும் என்னிடத்திலில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நட‘‘ என்று கட்டளையிட்டு அவனை சுகப்படுத்தும் நாளுக்காக ஆவலோடு காத்திருக்கிறேன்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

<u>**குறிப்பு**</u>: *தீர்க்கதரிசி உரைத்த இந்த தீர்க்கதரிசனம் ஏற்கனவே நிறைவேறி விட்டதா, அல்லது தற்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறதா, அல்லது இனிமேல்தான் நிறைவேறப் போகிறதா என்பது எனக்குத் தெரியாது. எனவே இந்த தீர்க்கதரிசனத்தை வைத்து எந்த உபதேசத்தையும் உண்டாக்கிக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

---

## சகோ.வில்லியம் பிரன்ஹாம்

---

## செய்தி: 60-05-22E புத்திரசுவிகாரம் #4

---

42. இது ஒருக்கால் உங்கள் மூச்சை திணறச் செய்யும். தேவனுடைய புத்திரர்களாக ஆன மனிதர்கள் சிறிய (amateur) தேவர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? எத்தனை பேருக்கு அது தெரியும்? இயேசு அவ்வாறு கூறியுள்ளார் என்று எத்தனை பேர் அறிவீர்கள்?" தேவர்களாயிருக்கிறீர்கள் என்று உங்கள் நியாயப்பிரமாணம் உரைக்கவில்லையா? நீங்கள் அவர்களை

தேவர்கள் என்று அழைத்திருக்க... என்று இயேசு வேதாகமத்தில் கூறியுள்ளார். யோவான் ஆதியாகமம் 2ல், அவர்கள் தேவர்கள் என்று கர்த்தர் கூறினார், ஏனெனில், உலகத்தின் மேல் அவர்கள் முழு ஆதிக்கமும் பெற்றிருந்தனர். எல்லா வற்றின் மேலும் அவர்களுக்கு ஆதிக் கத்தை கர்த்தர் அளித்திருந்தார். ஆனால், ஆதாமோ தன் தேவத்துவத்தை - தன் புத்திரத்துவத்தை - தன் ஆதிக்கத்தை இழந்து போனான். சாத்தான் அந்த ஆதிக்கத்தை பறித்துக் கொண்டான்.

ஆனால், மகிமை, நாம் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் வந்து மீண்டும் அந்த ஆதிக்கத்தைப் பெற்றுக் கொள்வார்கள். நாம் காலங்கள் நிறைவேறு வதற்காக காத்திருக்கிறோம். அப்பொழுது, கூர்நுனிக் கோபுரம் உச்சியையடைந்து,

தேவனுடைய புத்திரர் அனைவருமே வெளிப்பட்டு தேவனுடைய வல்லமை அப்பொழுது நடந்து சென்று (அல்லே லூயா) சாத்தான் பெற்றுள்ள ஆதிக்கம் அனைத்தையும் அவனிடமிருந்து கைப்பற்றப்படும். ஆம், ஐயா. அது இப்பொழுது அவனுக்கு சொந்தமா யுள்ளது.

43. இயேசு தேவனிடமிருந்து புறப்பட்டுச் சென்ற வார்த்தை (logos) அது உண்மை. அவர் தான் தேவனுடைய குமாரன். பின்பு அவர் மனிதனை சிறிய தேவனாக உண்டாக்கினார். "அவர் தேவ வசனத்தைப் பெற்றுக்கொண்ட தீர்க்கதரிசிகளை தேவர் கள் என்று அவர்கள் சொல்லியிருக்க..." என்றார். தேவனே அவர்களைத் தேவர்கள் என்று அழைத்திருக்கிறார். அவர் மோசே யிடம், "உன்னை நான் தேவனாக்கியிருக்கி றேன். ஆரோன் உன் தீர்க்கதரிசியா

யிருப்பான்'' என்றார். ஆமென். வ்யூ! நான் பக்தியுள்ள பைத்தியக்காரனாக காணப்படு கிறேன் என்று எனக்குத் தெரியும். ஆனால், நான் பைத்தியக்காரன் அல்ல. ஓ, உங்கள் கண்கள் திறக்கப்பட்டால். இவைகளை நீங்கள் காணலாம். சரி.

அவர் மனிதனை ஒரு தேவனாகப் படைத்தார். அவன் தன் ஆதிக்கத்திற்கு தேவனாயிருந்தான். அவனுடைய ஆதிக்கம் ஒரு கடல் தொடங்கி மறு கடல் வரைக்கும், ஒரு கடற்கரையிலிருந்து மறு கடற்கரை வரைக்கும் பரவியிருந்தது, அவனுக்கு அதன் மேல் ஆதிக்கம் இருந்தது.

இயேசு பாவமில்லாத தேவனாக இவ்வுலகில் வந்தபோது அதை நிரூபித் தார். காற்று பலமாக அடித்தபோது அவர் அமைதியாயிரு'' என்று அதை அதட்டி னார். ஆமென். அவர் மரத்தைப் பார்த்து,

இனிமேல் ஒருவனும் உன்னிடமிருந்து கனியைப் புசிப்பதில்லை" என்று சபித்தார்.

**சிறிய தேவர்களே, நீங்கள் மலையைப் பார்த்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி உங்கள் இருதயங்களில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், நீங்கள் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் அவர்.**

44.நீங்கள் ஆதியாகமத்திற்கு, தொடக் கத்திற்கு, மூல காரியத்திற்கு செல்லுங்கள்.

அது என்ன? இப்பொழுது உலகமும், இயற்கையும் தவித்து அழுது கொண் டிருக்கிறது. எல்லாமே அசைந்து கொண் டிருக்கிறது. எதற்காக? தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்காக.

**அப்பொழுது உண்மையான புத்திரர் மறுபடியும் பிறந்த புத்திரர், ஆவியினால்**

நிறைந்த புத்திரர் உரைப்பார்கள். அவர்களுடைய வார்த்தை ஆதரிக்கப்பட்டு, நிரூபிக்கப்படும். “அந்த எல்லைக்கு இப்பொழுது நாம் வந்துள்ளோம், என்று நம்புகிறேன். இந்த மலையைப் பார்த்து சொல். அது அப்படியே ஆகும்.”

”சகோதரனே, இன்னின்ன காரியம் நடைபெற வேண்டுமென்று விரும்புகிறேன். நான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்” என்று யாராகிலும் கூறினால்.

“கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அதை உனக்குத் தருகிறேன்” ஆமென். அங்கு தேவனுடைய புத்திரர் வெளிப்படுதல் உறுதியாகும்.

“ஓ, சகோதரனே, என் பயிர்கள் தீய்ந்துவிட்டன. மழையே இல்லை.”

“கர்த்தரின் நாமத்தில் மழையை அனுப்புகிறேன். உன் பயிர்களை ஆசீர்வதிக்கிறேன்.”

ஓ, இயற்கை அனைத்தும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்காக தவித்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது. தேவன் தொடக்கத்தில் அவ்வாறு நியமித்திருந்தார். அவர் மனிதனுக்கு ஆதிக்கத்தைக் கொடுத்திருந்தார்.

45. அவர் இயேசுவுக்கு அதை அருளினார். இயேசுவும் தமது நாமத்தில் அதை தந்தருளி, ''நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வதெதுவோ, அதை நான் உங்களுக்குக் கொடுப்பேன்'' என்னும் உறுதியளித்தார். ஓ, சகோதரன். பாமர்! தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறது. சபை அதன் ஸ்தானத்தை பெற்றுக் கொள்ளுதல்.

நான் ஏற்கனவே கூறினபடி, எபேசியர் நிருபம் யோசுவாவின் புத்தகத்துடன் இணைகின்றது, யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை அவர்களுக்குரிய இடத்தில்

வைத்தான். அவன் எப்பிராயீமை ஒரிடத்தில் வைத்த பின்பு, அவர்கள் மனாசேவுக்கு அளிக்கப்பட்ட தேசத்தில் குடிபுகுந்து, மனாசே கோபமுண்டு சண்டையிட்டால், அவர்கள் எப்படி ஒற்றுமையுடன் இருக்க முடியும்? ''நான் பாப்டிஸ்டு, நான் மெதோடிஸ்டு, நான் பெந்தெகொஸ்தேயினன், நான் ஒருத்துவக்காரன், நான் இருத்துவக்காரன், நான் இன்னான்'' என்று கூறிக்கொண்டால்! அதைக் குறித்து நீங்கள் என்ன செய்ய போகின்றீர்கள்? அமரிக்கையாயிருங்கள். தேவன் மாத்திரமே தமது சபையை - தேவனுடைய குமாரரையும் குமாரத்திகளையும் - ஸ்தானங்களில் வைப்பவர்.

**தேவனே ! அதைக் காண நான் உயிர் வாழ்வேனாக என்பதே என் விண்ணப்பம். சகோதரனே, அதை என் கைகளால் தொட்டு உணரக்கூடிய அளவுக்கு அது அருகாமை**

யில் உள்ளது. அது இங்கேயேயுள்ளது. அதை காண நான் ஆவலாயுள்ளேன். வீதியில் நடந்து சென்று, நான் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாயிருந்த ஒருவன் படுத்துக்கிடப் பதைக் கண்டு, “வெள்ளியும், பொன்னும் என்னிடத்திலில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நட” என்று கட்டளையிட்டு அவனை சுகப்படுத்தும் நாளுக்காக ஆவலோடு காத்திருக்கிறேன்.

ஒ, தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற் காக காத்திருத்தல்.

அல்லேலூயா, தேவன் அப்பொழுது தம்மை வெளிப்படுத்துவார். அப்பொழுது அது வியாதியை நிறுத்தும், புற்றுநோயை நிறுத்தும், எல்லா வியாதிகளையும் நிறுத்தும்.

**There'll be a power put into the Church, and now is coming in, that the Holy Spirit will so anoint the people, till they'll speak the Word and It'll create Itself right there.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

**<u>குறிப்பு</u>:** *தீர்க்கதரிசி உரைத்த இந்த தீர்க்கதரிசனம் ஏற்கனவே நிறைவேறி விட்டதா, அல்லது தற்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறதா, அல்லது இனிமேல்தான் நிறைவேறப் போகிறதா என்பது எனக்குத் தெரியாது. எனவே இந்த தீர்க்கதரிசனத்தை வைத்து எந்த உபதேசத்தையும் உண்டாக்கிக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

---

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

---

## செய்தி: 60-0313 — Hear Ye Him

---

Now, if that son proven to be a right kind of a son (loved the father's business, stayed right with his instructions), the father then on a certain day took that son out before the public, set him up on a high place, clothed him in a

beautiful garment, and he had what they call the adoption of a son, or placing a son positionally what he was.

They had a ceremony, and then the father said, “This, my son, I adopt him or place him positionally.” And if they had checks in those days, that son’s name on the check was just as good as his father’s name was, ’cause he was placed. And the son could fire who he wanted to; he could hire who he wanted to; he was in full possession of all the father had.

37 Now, you see, Jesus had proven to God that He'd been the right kind of Son. And God took Him up on the top of the mountain, brought witnesses out there—heavenly witnesses and earthly witnesses—and He clothed Him in immortality. When they looked up, they said, "His garments shined like the sun." A supernatural something taken place. His garments glistened like the sun in its middle of the day, as white as they could be. God placed on Him that robe of immortality, showing that He had received Him.

That's the thing that God will do to His sons here on earth someday. He will call you aside, Church, if you'll only obey Him and stay on the Word and believe it. And He will place into the Church, before the coming of Jesus Christ…He will place into the Church…All the powers that Christ had in Him will be in the Church. All that God was, He poured into Jesus; all that Jesus was, He pours into the Church. God wanting His work done, He sent it into His Son; the Son wanting the work done, sent it into the Church. "At that day you'll know that I'm in the

Father, the Father in Me, and I in you, and you in Me." At that day, because the same power of God, was in Jehovah God, rested in Jesus Christ. The same power that rested in Jesus Christ, rests in the placed sons in the body of Christ.

38 Placing of a son…Take him out in a certain place, have a ceremony before Angels, and place him positionally what he is in the body of Christ. Then that person has the authority.

Let me say this, if you count me a fanatic from this night on.

That very same thing that I'm speaking of will be done.

**There'll be a power put into the Church, and now is coming in, that the Holy Spirit will so anoint the people, till they'll speak the Word and It'll create Itself right there.**

**We haven't seen powers like's coming into the Church now. I know it for a fact.**

**"Say unto this mountain be moved. Don't doubt in your heart, but believe that what you've said shall come to pass, you can have what you have**

**said": the placing of the Church in position, where the fulness of the power of the Holy Ghost comes into the Church.**

**Then critics' mouths will be shut.**

**It'll be a short time. Jesus come right off the mountain, went straight to Calvary. Notice, it won't last long, but it'll be here.**

60-0313 — Hear Ye Him

Rev. William Marrion Branham

**ஜனங்கள், அந்த சிறு மந்தை, தேவன் அவனுக்கு அளிக்கப்போகும் அந்த மீதியானவர்கள், தேவனை நோக்கிக் கூப்பிடட்டும். அப்பொழுது என்ன நடக்கிறதென்று கவனியுங்கள். தேசிய பலப்பரீட்சை உண்டாகும். அவர்கள் முன்பு கண்டிராத வகையில் வல்லமை உண்டாகும். ஆனால் தொல்லை என்னவெனில், இந்த முறை அவர்களுக்கு காலதாமதம் ஏற்பட்டிருக்கும். கதவுகள் அடைபட்டிருக்கும்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

**<u>குறிப்பு</u>:** *தீர்க்கதரிசி உரைத்த இந்த தீர்க்கதரிசனம் ஏற்கனவே நிறைவேறி விட்டதா, அல்லது தற்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறதா, அல்லது இனிமேல்தான் நிறைவேறப் போகிறதா என்பது எனக்குத் தெரியாது. எனவே இந்த தீர்க்கதரிசனத்தை வைத்து எந்த உபதேசத்தையும் உண்டாக்கிக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

---

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

---

# செய்தி: 61-11-12 கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம்

---

191. அணுகுண்டுகளும்; 'பென்டகனில்' ஜனங்கள் பயந்து போய், என்ன செய்வதென்று திகைத்துக் கொண்டிருக்கும் போது, வானத்தில் பறக்கும் தட்டுகள் போன்ற மர்மமான அடையாளங்கள் காணப்படும் போது, தேவன் முன்னறிவித்த யாவும் நிறைவேறிக் கொண்டிருக்கும் போது,

எலியா காட்சியில் தோன்றும் நேரம் வந்து விட்டது - அவன் எங்கோ இருக்கிறான்.

192. **ஜனங்கள், அந்த சிறு மந்தை, தேவன் அவனுக்கு அளிக்கப்போகும் அந்த மீதியானவர்கள், தேவனை நோக்கிக் கூப்பிடட்டும். அப்பொழுது என்ன நடக்கிறதென்று கவனியுங்கள். தேசிய பலப்பரீட்சை உண்டாகும். அவர்கள் முன்பு கண்டிராத வகையில் வல்லமை உண்டாகும்.**

**ஆனால் தொல்லை என்னவெனில், இந்த முறை அவர்களுக்கு காலதாமதம் ஏற்பட் டிருக்கும். கதவுகள் அடைபட்டிருக்கும்.**

எனவே நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம் என்பதை நினைவுகூருங்கள். ஜெபம் செய்யுங்கள்!

நம்முடைய ஒவ்வொரு தசைநாரும் பரிசுத்த ஆவியினால் நிறையப்படும் வரைக்கும் சில நிமிடங்கள் உறுதியாய் நிலைத்திருக்கிறோம். அதன் பிறகு சபை மேலே செல்லும். ஓ, என்னே!



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# செய்தி: 62-02-11 ஒன்றாயிருத்தல்

209. நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம், நாம் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் வந்திருக்கிறோம்.

**நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? அந்த எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம்.** ஆயத்தப்படுத்திக் கொண்டு...

**நம்முடைய ஒவ்வொரு தசைநாரும் பரிசுத்த ஆவியினால் நிறையப்படும் வரைக்கும் சில நிமிடங்கள் உறுதியாய் நிலைத்திருக்கிறோம். அதன் பிறகு சபை மேலே செல்லும். ஒ, என்னே !**

தம்முடைய ஜனங்களை ஒருமித்து தம்மிடம் அழைத்து, அவருடன் உண்மை யான ஒன்றாயிருத்தலைப் பெறுதல்.

ஏனெனில் அது அவருடைய ஒரே பரிசுத்த ஆவி, "ஒரே ஆவியினாலே நாம் எல்லோரும் (தனித்தனியாக) ஒரே சரீரத் திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப் பட்டு, மொத்தமாக இயேசு கிறிஸ்துவின் சரீரமாகின்றோம்".

இயேசு கிறிஸ்து தமது ஆவியினால் நமது மாம்சத்தில் வாசம் செய்து, சபைக்கு சேவை செய்து, அவர் முன்பு செய்த அதே கிரியைகளைச் செய்து.. நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம் என்றும் எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம் என்றும் உலகத்துக்கு அந்த அடையாளத்தைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்.

ஓ, நான் அவரை நேசிக்கிறேன். நீங்களும் அல்லவா?



**மணவாட்டிக்கும் உண்மையாக எழுப்புதல் இன்னும் நிகழவில்லை. பாருங்கள்? இன்னும் அங்கே எழுப்புதல் இல்லை, மணவாட்டியை அசைத்தெழுப்பும்படியாக இன்னும் தேவனுடைய வெளிப்படுத்துதல் இன்னும் வரவில்லை. பாருங்கள்? நாம் இப்பொழுது அதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

**<u>குறிப்பு</u>:** *தீர்க்கதரிசி உரைத்த இந்த தீர்க்கதரிசனம் ஏற்கனவே நிறைவேறி விட்டதா, அல்லது தற்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறதா, அல்லது இனிமேல்தான் நிறைவேறப் போகிறதா என்பது எனக்குத் தெரியாது. எனவே இந்த தீர்க்கதரிசனத்தை வைத்து எந்த உபதேசத்தையும் உண்டாக்கிக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

---

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

---

# செய்தி: 63-0320 – மூன்றாம் முத்திரை

---

182 இப்பொழுது, இன்றைக்கு அதுதான் காரணமாகும், அதாவது, நாம் பெற்றிருப்பதாக எண்ணப்படும் எழுப்புதல்கள் யாவும் ஸ்தாபன எழுப்புதல்கள் ஆகும். ஆனால் உண்மையில் அவை இருதய உணர்ச்சிகளை எழுப்புவதாக அமைந்திருக்கவில்லை. இல்லை, இல்லை,

இல்லை, இல்லை ஐயா, நம்மிடையே எழுப்புதல்கள் உண்டாவதாகக் கருத வேண்டாம். அது நம்மிடம் இல்லை. ஓ, ஸ்தாபன சபைகளில் அவர்களுக்குக் கோடிக்கணக்கான அங்கத்தினர்கள் உண்டு. ஆனால் உண்மையான எழுப்புதல் எங்கே யும் காணப்படுவதில்லை. இல்லை. இல்லை.

183 மணவாட்டிக்கும் உண்மையாக எழுப்புதல் இன்னும் நிகழவில்லை.

பாருங்கள்? இன்னும் அங்கே எழுப்புதல் இல்லை, மணவாட்டியை அசைத்தெழுப் பும்படியாக இன்னும் தேவனுடைய வெளிப்படுத்துதல் இன்னும் வரவில்லை.

பாருங்கள்? நாம் இப்பொழுது அதற் காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இதுவரை இரகசியமாயுள்ள அந்த ஏழு இடிகள் தான் அவளை மறுபடியுமாக

எழுப்பும். பாருங்கள், ஆம். அவர் அதை அனுப்புவார். அவர் அதை அனுப்புவதாக வாக்களித்துள்ளார். இப்பொழுது கவனி யுங்கள்.

**63-0320 — மூன்றாம் முத்திரை**

Rev. William Marrion Branham



ஆனால் சடுதியாக, நம்மை வேகமாக அழைத்துக் கொண்டு செல்வது போன்ற ஒன்று உண்டாகும். அப்பொழுது நீங்கள் மறுரூபமடைவீர்கள். நீங்கள் ஆபிரகாமைப் போல், வயோதிபனிலிருந்து வாலிபனாகவும், வயோதிப ஸ்திரீயிலிருந்து வாலிப ஸ்திரீயாகவும் மாறி விடுவீர்கள். இந்த சடுதியான மாற்றம் என்ன? சற்று கழிந்து நீங்கள் சிந்தனையைப் போல் பிரயாணம் செய்வீர்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23 M கேள்விகளும் பதில்களும் COD #19

240. **எடுத்துக் கொள்ளப்படுதலின் போது மணவாட்டி ஓரிடத்தில் ஒன்றாக கூடியிருப்பாளா, அது மேற்கு பாகத்தில் இருக்குமா?**

55. இல்லை, அது அங்கு இருக்க வேண்டியதில்லை. ஆம், மணவாட்டி ஓரிடத்தில் ஒன்றாக கூடியிருப்பாள் என்பது உண்மையே, ஆனால் உயிர்த் தெழுதல் வரைக்கும் அது நடக்காது - பாருங்கள் "கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம். எபேசியர் 2 தெசலோனிக்கேயர் 5ம் அதிகாரம் என்று

நினைக்கிறேன். "கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் (உலகம் பூராவிலும்) நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை (அவர்களைத் தடை செய்வதில்லை). தேவ எக்காளம் முழங்கும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார் கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் அவர்களோடே கூட எடுத்துக் கொள்ளப் பட்டு, கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்போம்" (1 தெச. 4:15-17). எனவே, கர்த்தரைச் சந்திக்கச் செல்லும் போது, மணவாட்டி ஒன்று கூடியிருப்பாள். பாருங்கள்? அவள் ஒன்று கூடியிருப்பாள். ஆனால் அவர்கள் எல்லோரும் இது போல் ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஏனெனில் மணவாட்டி உலகம் சுற்றிலும் - ஆர்டிக் பிரதேசம் தொடங்கி வெப்பமான தேசம் வரை யிலும், கிழக்கிலிருந்து மேற்கு வரையி

லும், வடக்கிலிருந்து தெற்கு வரையிலும் - பூமியின் தூளில் நித்திரை செய்து கொண்டிருக்கிறாள்

56. "மனுஷகுமாரன் வரும் போது, அது கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிற மின்னல் போல் இருக்கும்" என்று இயேசு கூறியுள்ளார். முழு விஷயமே, உயிர்த்தெழுதல் இருக்கும், எடுத்துக் கொள்ளப்படுதல் இருக்கும். அவள் இங்கிருந்து போய் விடுவாள். அவரைச் சந்திக்க அவள் போவதற்கு முன்பு...

57. கர்த்தருடைய ஞானத்தைக் கவனியுங்கள். இப்பொழுது, உதாரணமாக, இதை கூறும் போது... கிருபையின் நினைவுகள் மூலமாகவும், வார்த்தையில் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலமாகவும், நான் "நாம்" என்று கூறுகிறேன். நான் உங்களோடு கூட என்னையும் உலகம்

முழுவதும் உள்ள கிறிஸ்துவின் சரீரத்துடன் இணைத்துக் கொள்கிறேன். அதை நான் விசுவாசிக்கிறேன். நான் “நாம்” என்று கூறும் போது கிருபையினால் அதை விசுவாசிக்கிறேன். அவருடைய கிருபையினால், எடுத்துக்கொள்ளப்படும் அந்த மக்களில் நாமும் இருப்போம் என்று நான் விசுவாசிக்கிறேன்.

58. நாம் உயிர்த்தெழும் போது, முதலாவது நடப்பது என்னவெனில்.. உயிரோடிருப்பவர்கள் இங்கிருப்பார்கள். முதலாவதாக உயிர்த்தெழுதல் நிகழும், நித்திரையடைந்தவர்களின் உயிர்த்தெழுதல். நித்திரையிலுள்ளவர்களை தட்டி எழுப்பும் நேரம் ஒன்றிருக்கும். இப்பொழுது பூமியின் தூளில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்கள் - பாவத்தில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்கள் அல்ல, அவர்கள் தொடர்ந்து நித்திரை

செய்து கொண்டிருப்பார்கள். இன்னும் ஆயிரம் ஆண்டு காலம் வரைக்கும் அவர்கள் தொடர்ந்து நித்திரையிலிருந்து எழும்புவதில்லை. ஆனால் கிறிஸ்துவுக் குள் மரித்து பூமியின் தூளில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்கள் முதலில் நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள். அவர்கள் - இந்த அழிவுள்ள சரீரங்கள் கர்த்தருடைய எடுத்துக்கொள்ளப்படும் கிருபையினால் அழியாமையைத் தரித்துக் கொள்ளும். அதன் பிறகு நாம் எல்லோரும் ஒன்று கூடுவோம். அவர்கள் ஒன்று கூடத் தொடங்கும் போது, உயிரோடிருக்கிற நாம் மறுரூபப்படுவோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் மரணத்தைக் காண்பதில்லை. ஆனால் சடுதியாக, நம்மை வேகமாக அடித்துக் கொண்டு செல்வது போன்ற ஒன்று உண்டாகும். அப்பொழுது நீங்கள் மறுரூபமடைவீர்கள். நீங்கள் ஆபிரகா மைப் போல், வயோதிபனிலிருந்து வாலிப

னாகவும், வயோதிப ஸ்திரீயிலிருந்து வாலிப ஸ்திரீயாகவும் மாறி விடுவீர்கள். இந்த சடுதியான மாற்றம் என்ன? சற்று கழிந்து நீங்கள் சிந்தனையைப் போல் பிரயாணம் செய்வீர்கள். அப்பொழுது நீங்கள் ஏற்கனவே உயிர்த்தெழுந்தவர் களை காண முடியும். ஓ, என்ன ஒரு நேரம்! அதன் பிறகு நாம் அவர்களுடன் ஒன்று சேர்ந்து, அவர்களோடு கூட எடுத்துக் கொள்ளப்பட்டு, கர்த்தரை ஆகா யத்தில் சந்திப்போம்.

59. உங்கள் 'அங்கிள்' தென் கென்டக்கி யில் அடக்கம் பண்ணப்பட்டிருந்தால், அவர் இந்தியானாவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றோ, அல்லது இந்தியானாவில் அடக்கம் பண்ணப்பட் டிருந்தால், தென் கென்டக்கிக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றோ அவசிய மில்லை. அவர் எங்கிருந்தாலும்... கடலில்

மரித்தவர் கடலிலிருந்து எழுந்திருப்பார் கள். விளையாட்டு அரங்கத்தில் சிங்கங் களினால் புசிக்கப்பட்டு அழிக்கப்பட்டவர் களும், அக்கினி சூளையில் போடப்பட்டு எலும்புகளும் கூட சாம்பலானவர்களும், உயிரோடெழும்புவார்கள். அவர்கள் ரோமாபுரியில் இருந்திருந்தாலும், ரோமா புரியிலுள்ள விளையாட்டு அரங்கத்தில் இருந்திருந்தாலும், அல்லது தென் பாகத் திலுள்ள வெப்பமான காடுகளில் இருந் திருந்தாலும், அல்லது பனி உறைந்துள்ள வடக்கு பாகத்தில் இருந்திருந்தாலும், அவர்கள் மரித்தோரிலிருந்து உயிரோ டெழுந்து, மருரூபமடைந்து மேலே கொண்டு வரப்படுவார்கள். உயிரோடிருப் பவர்கள் ஒரு நொடிப் பொழுதில், ஒரு கண் இமைப் பொழுதில் மறுரூபமடைந்து, அவர்களோடு கூட எடுத்துக் கொள்ளப் படுவார்கள்.

60. ஆப்பிரிக்காவின் ஊழியக்களத்தில் மரித்துப்போன மிஷனரிமார்களைப் பாருங்கள். வடக்கிலுள்ள பனி உறைந்த இடங்களில் மரித்துப் போனவர்களைப் பாருங்கள். விளையாட்டு அரங்கங்களிலும், உலகம் முழுவதிலும், காங்கோ பிரதேசத்திலும் மரித்துப் போனவர்களைப் பாருங்கள். அவர்கள் எல்லாவிடங்களிலும் மரித்தனர் - சீனாவில், ஜப்பானில், உலகெங்கிலும், கர்த்தருடைய வருகை உலகம் முழுவதற்கும்; எடுத்துக் கொள்ளப் படுதல் உலகம் முழுவதும் சம்பவிக்கும்.

61. நேரம் மாற்றத்தைக் கவனியுங்கள். படுக்கையில் இரண்டு பேர் இருப்பார்கள்; நான் ஒருவனை எடுத்துக் கொண்டு மற்றவனை விட்டு விடுவேன். அதே நேரத்தில், "இரண்டு பேர் வயலில் இருப்பார்கள்: நான் ஒருவனை எடுத்துக் கொண்டு மற்றவனை விட்டு விடுவேன்.

ஒன்று பூமியின் இருளான பக்கம், மற்றது பூமியின் வெளிச்சமான பக்கம். பாருங் கள்? அது உலகம் முழுவதும் நடக்கப் போகும் எடுத்துக் கொள்ளப்படுதல். ஆம், சபையானது ஒன்று கூடியிருக்கும். ஆனால் அது உயிர்தெழுதலும் எடுத்துக் கொள்ளப் படுதலும் நிகழ்ந்த பிறகு.

62. நீங்கள் அந்த விதமாக அதை காணவில்லை என்றால், அதனால் பரவா யில்லை. அதை நான் சரியாக கூறவில்லை; இதை நாம் ஒலிநாடாவில் பதிவு செய்கி றோம். பாருங்கள்? வேறு ஊழியக்காரர்கள் இதனுடன் ஒருவேளை இணங்காமலிருக் கலாம். அதனால் பரவாயில்லை.

அதன் காரணமாகவே, ஜீவபுஸ்தகத்தில் முன்குறிக்கப்பட்ட மணவாட்டியானவள் அழைக்கப்படும்போது, வானத்திலிருந்து ஓர் சத்தம் பிறந்து, அது மணவாட்டிக்குள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அபரிமிதமாக நிரப்பி, பூமியிலிருந்து அவள் எடுக்கப்படுவதற்கேற்ற கிருபையையுண்டாக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். தேவன் அதை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

<u>**குறிப்பு**</u>: *தீர்க்கதரிசி உரைத்த இந்த தீர்க்கதரிசனம் ஏற்கனவே நிறைவேறி விட்டதா, அல்லது தற்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறதா, அல்லது இனிமேல்தான் நிறைவேறப் போகிறதா என்பது எனக்குத் தெரியாது. எனவே இந்த தீர்க்கதரிசனத்தை வைத்து எந்த உபதேசத்தையும் உண்டாக்கிக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

---

## சகோ.வில்லியம் பிரன்ஹாம்

---

# செய்தி: 63-11-24E மூவகை விசுவாசிகள்

---

97. **அதன் காரணமாகவே, ஜீவபுஸ்தகத்தில் முன்குறிக்கப்பட்ட மணவாட்டியானவள் அழைக்கப்படும்போது, வானத்திலிருந்து ஓர் சத்தம் பிறந்து, அது மணவாட்டிக்குள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அபரிமிதமாக நிரப்பி, பூமியிலிருந்து அவள் எடுக்கப் படுவதற்கேற்ற கிருபையையுண்டாக்கும்**

**என்று நான் விசுவாசிக்கிறேன். தேவன் அதை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.**

விஞ்ஞானமும், விண்வெளி வீரர்களும் அநேக கோடி மைல்கள் தூரம் விண்வெளியில் சென்று ஆராய்ந்து பரலோகம் என்ற ஒன்று இல்லையென்று கூறி உறுதிப் பத்திரமாக வெளியிட்டாலும், அதை குறித்து எனக்கு எந்தவித கவலையுமில்லை. பரலோகம் என்று ஒன்றுண்டு. அங்கே உண்மைத்துவமாக இயேசு கிறிஸ்து என்பவரும் உண்டு.

அவர் அங்கிருந்து ஒரு சரீரத்தில் தம்முடைய மணவாட்டியாகிய சபையை பெற்றுக்கொள்ள வருவார்!

எவ்வளவு பழையக் கதையாக அது தோன்றினாலும் அது ஒரு காரியமல்ல, ஏனெனில் அதை தேவன் கூறினதினால் அது சத்தியமாயிருக்கிறது. அதைதான் விசுவாசிகள் விசுவாசிக்கின்றனர்.

நீங்கள் கர்த்தருடைய வருகையைக் காணும்வரையில், பெரிதான எதுவும் நடப்பதை ஒருபோதும் காணமாட்டீர்கள். இப்பொழுது நினைவிருக்கட்டும்.

செய்தி: **63-01-18 சத்தியத்தின் ஆவி**

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**



**இப்பொழுது நாம் நம்முடைய சந்ததியில் கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய சந்ததியில் நான் எழுப்புதலை எதிர்பார்க்கவில்லை, கர்த்தருடைய வருகையையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.**

செய்தி: **65-11-25 கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



# நாமும் நமக்குள் இருக்கும் எழுப்புதலை சாக விட்டுவிடக் கூடாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## சகோ.வில்லியம் பிரன்ஹாம்

# செய்தி: 63-0825M – நான் எப்படி ஜெயங்கொள்ள முடியும்?

இன்று காலை நான், *நான் எப்படி ஜெயங்கொள்ள முடியும்?* என்பதை என் பொருளாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது, இதை நான் தெரிந்து கொள்ளக் காரணம், எழுப்புதலின் ஆவியை நாம் ஒருபோதும் அணைந்து போகச் செய்யக் கூடாத ஒரு நேரமாய் இது உள்ளது என்றே நான் கருதுகிறேன்.

நாம் எழுப்புதலை கொண்டவர்களாய், அதை ஒவ்வொரு நாளும் தொடர்ந்து உயிர்ப்பிக்க வேண்டும்.

கிறிஸ்து அவனுக்குள் ஜீவிப்பதற்காக அவன் அனுதினமும் சாக வேண்டியிருந்ததாக பவுல் கூறினான்.

நாமும் நமக்குள் இருக்கும் எழுப்புதலை சாக விட்டுவிடக் கூடாது.



**நான் எந்த மகத்தான எழுப்புதலையும் எதிர்நோக்கியிருக்கவில்லை. அதைக் குறித்த காரியம் என்னவெனில், எழுப்புதல் வந்து போய் விட்டது, நீங்களோ அதை அறியவில்லை**



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: தீவிரமாய் வந்து அங்கே ஓடித்தப்பித்துக் கொள், 58-0202, பத்தி எண் 12

---

நான் எந்த மகத்தான எழுப்புதலையும் எதிர்நோக்கியிருக்கவில்லை.

அதைக் குறித்த காரியம் என்னவெனில், எழுப்புதல் வந்து போய் விட்டது, நீங்களோ அதை அறியவில்லை.

அது எப்பொழுதுமே அவ்வாறு தான் இருந்து வந்துள்ளது.

நீங்கள் ஏதோவொன்றிற்காக எதிர்நோக்கியிருக்கிறீர்கள், சாத்தான், “இங்கே மகத்தானது இருக்கப்போகிறது, இங்கே மகத்தானது இருக்கப் போகிறது” என்று தொடர்ந்து கூறிக்கொண்டிருப்பான்.

மேலும் அது சரியாக உங்கள் பக்கத்தில் கடந்து செல்லும்.

யோவான் ஸ்நானன் பூமியில் வந்திருந்த போது, நீதிமான்கள் கூட அவனை அடையாளம் கண்டு கொள்ளவில்லையே? சீஷர்கள், “எலியா எப்போது வருவார்?” என்று கேட்கவில்லையா?

அவரோ, “அவன் ஏற்கனவே வந்தாயிற்று, நீங்களோ அதை அறியவில்லை” என்றார்.

★★★★★

இதுதான் இங்குள்ள இந்த கேள்வி:
“மணவாட்டியினால் அற்புதங்கள் செய்யப்படுமா?”
ஆம், ஐயா. அது இப்பொழுது செய்யப்பட்டு
வருகிறது. அது உண்மை! பார்த்தீர்களா? ஆனால்
அந்த மகத்தான ஏதோ காரியத்தை
எதிர்பார்க்காதீர்கள், அல்லது மழை
பெய்யாதபடிக்கு, வானங்களை வானங்களை
அடைத்தல். அது யூதர்களுக்கு
செல்லவிருக்கிறது. புரிகிறதா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 64-0830M — கேள்விகளும் பதில்களும் #3

375. **மணவாட்டி இங்கிருந்து புறப்படுவதற்கு முன்பு பரிசுத்த ஆவியின் ஒரு அசைவு இருந்து, அவளால் அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்படுமா, அல்லது அவருடைய பிரத்தியட்ச மாகுதலுக்காக நாம் காத்திருக்கிறோமா?**

310 அந்த ஒன்றின் பேரில் நான் முடித்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்று, நான் நினைக்கிறேன், ஏனெனில் பதில் சொல்வதற்கு இன்னும் அநேகம் உள்ளன. அதிக நேரமாகிவிட்டது. இப்பொ ழுது நேரம் ஒரு மணிக்கு இருபது நிமிடங் கள் உள்ளது, இங்கு இன்னும் அவைகளில்

முப்பது அல்லது ஒருவேளை நாற்பது இருக்கக் கூடும், இருக்கலாம். எனக்கு உள்ள நேரத்தில் நான் இதற்கு சிறந்த முறையில் பதிலளிப்பேன். நான்...மூன்று நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறேன். மற்ற இவைகளுக்கு என்னால் முடியும்போது எடுத்துக் கொள்வேன். புரிகிறதா? எப்பொழுது என்னால் இவைகளை எப்போது எடுத்துக்கொள்ள முடியும்மென்று எனக்குத் தெரியவில்லை; என்னால் முடிந்தவரையில் அதை சிறப்பாக செய்வேன். நீங்கள் இவைகளை அனுபவித்து மகிழ்கின்றீர்களா? நான்...அது எனக்கும் கூட உதவியாயுள்ளது. புரிகிறதா?

இங்கு வந்து இவைகளை இந்த விதமாக எடுக்கும்போது, முன்பு பார்க்காமல் பொறுக்கி எடுக்கும்போது (உங்களுக்குப் புரிகிறதா?), உங்களால் பதில் கூற

இயலாத சில கேள்விகள் கிடைத்துவிடு கின்றன, மேலும்—மேலும் நான-நான் எடுப்பேன் என்று...நம்பியிருந்தேன். சர்ப்பத்தின் வித்தைக் குறித்த ஒரு கேள்வி இங்குள்ளது என்று எனக்குத் தெரியும். நான் மிகவும் ஆவலாக அதற்கு பதில் கூற விரும்பினேன்; நான் அதை விவரிக்க வேண்டுமென்று விரும்பினேன். புரிகிறதா? ஆனால் அதை எடுக்கத் தவறி விட்டேன் என்று நான் நினைக்கிறேன், எனவே நான்...ஒருக்கால் அதை அந்த விதமாக செய்வது கர்த்தருக்குப் பிரிய மில்லை போலும், ஆனால் அது சர்ப்பத் தின் வித்தின் பேரில். அந்த ஒலி நாடா வைக் கேட்கிறவர்கள் ஒருக்கால், “பாருங் கள், அவர் விட்டுவிட்டார், அதற்கு பதில் கூறாமல் விட்டுவிட்டார்” என்று கூறுவார் கள். அதற்காக எத்தனை பேர் இன்னும்

இரண்டு நிமிடங்கள் சகித்துக்கொள்வீர் கள்? ஹூ? சரி.

311 இப்பொழுது பொறுங்கள், முதலா வதாக இந்த ஒன்றுக்கு நான் பதில் கூறட்டும். நாம் பார்ப்போமாக! "...நடை பெறுமா?" இல்லை. **இதுதான் இங்குள்ள இந்த கேள்வி: "மணவாட்டியினால் அற்புதங் கள் செய்யப்படுமா?" ஆம், ஐயா. அது இப்பொழுது செய்யப்பட்டு வருகிறது. அது உண்மை! பார்த்தீர்களா? ஆனால் அந்த மகத்தான ஏதோ காரியத்தை எதிர்பார்க்கா தீர்கள், அல்லது மழை பெய்யாதபடிக்கு, வானங்களை வானங்களை அடைத்தல். அது யூதர்களுக்கு செல்லவிருக்கிறது. புரிகிறதா? அது இங்கு சம்பந்தப்பட்டதல்ல; அது மோசே யும் எலியாவும் யூதர்களிடம் செல்லுதல், அது இந்த சபைக்கு அல்லவே அல்ல.** நீங்கள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின்

முதல் மூன்று அதிகாரங்களைப் படியுங்கள்; சபை என்னவென்று அங்கு புரிந்து கொள்வீர்கள். சபைக்கு அவ்வளவுதான். அது மணவாட்டியுடன் திரும்ப வரும் போது, அவள் திரும்ப வரும்போது...படியுங்கள்...சபையைக் குறித்து நீங்கள் அறிய வேண்டுமானால், அதனுடன் சம்பந்தப்பட்டுள்ளது எதுவென்று, வெளிப்படுத்தின விசேஷம் முதல் மூன்று அதிகாரங்களைப் படித்துவிட்டு, அங்கிருந்து 19-ம் அதிகாரத்துக்கு சென்று அதிலிருந்து தொடங்கி படியுங்கள். அங்கு நீங்கள் மணவாட்டியை காணலாம். அங்கே அதனுடைய மற்றது யூதரிடம் உள்ளது.

ஒரு நாள் வரப்போகிறது. அப்பொழுது மனிதரின் மாமிசம் அழுகி, அவர்கள் மரிப்பதற்கு முன்பே பருந்துகள் அவர்களுடைய மாமிசத்தைத் தின்னத் தொடங்கும் என்று வேதம் கூறுகின்றது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

**<u>குறிப்பு</u>:** *தீர்க்கதரிசி உரைத்த இந்த தீர்க்கதரிசனம் ஏற்கனவே நிறைவேறி விட்டதா, அல்லது தற்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறதா, அல்லது இனிமேல்தான் நிறைவேறப் போகிறதா என்பது எனக்குத் தெரியாது. எனவே இந்த தீர்க்கதரிசனத்தை வைத்து எந்த உபதேசத்தையும் உண்டாக்கிக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

---

## சகோ.வில்லியம் பிரன்ஹாம்

---

## செய்தி: 60-05-22E புத்திரசுவிகாரம் #4

---

46. புற்றுநோய் பயங்கரமானது என்னும் கருத்தைக் கொண்டிருக்கிறீர்களா?

**ஒரு நாள் வரப்போகிறது. அப்பொழுது மனிதரின் மாமிசம் அழுகி, அவர்கள் மரிப்பதற்கு முன்பே பருந்துகள் அவர்களுடைய மாமிசத்தைத் தின்னத் தொடங்கும் என்று வேதம் கூறுகின்றது.**

**அதனுடன் புற்றுநோயை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, புற்றுநோய் சாதாரண பல்வலியைப் போன்றது.**

**ஆனால், தேவனுடைய முத்திரையைத் தரித்திருப்பவர்களை அந்த பயங்கரமான வியாதி தொடக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.**

**அந்த பயங்கரமான வாதைகள் ஜனங் களைத் தாக்குவதற்கு முன்பே நாம் உள்ளே நுழைந்து, தேவனுடைய ராஜ்யத்தில் நமது ஸ்தானத்தில் பொருத்தப்பட வேண்டும் என்று ஆவல் கொண்டிருக்கிறோம்.**

ஓ, எவ்வளவு அருமையாயுள்ளது! காலங்கள், காலங்கள் நிறைவேறுதல், சுதந்தரம்.

நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்து வுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்.

நீண்ட கூந்தலைக் கொண்ட வெட்டுக்கிளிகள் பூமியில் தோன்றி (வெளி. 9:8). கூந்தலைக் கத்தரித்துள்ள ஸ்திரீகளை துன்பப்படுத்தும்- அவைகளுக்கு ஸ்திரீகளைப் போல் நீண்ட கூந்தல் தொங்கிக் கொண்டிருக்கும்; அவைகளுக்கு சிங்கத்தைப் போல் நீண்ட பற்களும், அவைகளின் வாலில் தேள்களைப் போல் கொடுக்கும் இருக்கும். அவை மனிதரை இப்பூமியில் வேதனைப்படுத்தும். அப்பொழுது எதையும் செய்யமுடியாதபடிக்கு காலதாமதமாகியிருக்கும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

**<u>குறிப்பு</u>:** *தீர்க்கதரிசி உரைத்த இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள் ஏற்கனவே நிறைவேறி விட்டதா, அல்லது தற்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறதா, அல்லது இனிமேல்தான் நிறைவேறப் போகிறதா என்பது எனக்குத் தெரியாது. எனவே இந்த தீர்க்கதரிசனத்தை வைத்து எந்த உபதேசத்தையும் உண்டாக்கிக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

---

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

---

# செய்தி: 65-08-22M கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார்

---

18. சில நிமிடங்களுக்கு முன்பு ஒரு வாலிபப் போதகருடனும் அவருடைய மனைவியுடனும் அந்த அறையில் பேசிக்கொண்டிருந்தேன். இவ்வுலகிலுள்ள மற்றவரைப் போலவே அவர்களும் பயங் கொண்டவர்களாயிருக்கின்றனர். நான், "ஞாபமிருக்கட்டும், சாத்தான் உங்களைக்

குத்த வந்துக் கொண்டிருக்கிறான்” என்று அவர்களிடம் கூறினேன். அது யாராயிருந் தாலும் கவலையில்லை, உங்களைக் ஒரு குத்து குத்துவதற்கு அவன் உரிமை பெற்றிருக்கிறான். அந்த குத்து ஒருக்கால் உங்களை குருடராக்கியிருக்கலாம்; அல்லது நாற்காலியில் அமர்ந்துக் கொண் டிருக்கும் கீல்வாதக்காரராகச் செய்திருக்க லாம்; அல்லது உங்களுக்கு நரம்பு தளர்ச்சி யைக் கொடுத்திருக்கலாம். பாருங்கள்? உங்களை எந்தவிடத்திலும் அவன் குத்தக் கூடும். திறந்துள்ள அந்தவிடத்தில் குத்த அவனுக்கு உரிமையுண்டு. அந்த இடத்தை நீங்கள் எப்பொழுதும் மூடிக் கொண்டிருக்க கவனமாயிருக்க வேண்டும். நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நடுக்கமுள்ள இக்காலத்தை பார்க்கும்போது..

19. கடந்த வாரத்தின் ஒலிநாடாக்கள் அந்த பயங்கரமான காரியங்களை உங்களுக்கு வெளிப்படுத்தும். என்றாவது

ஒரு நாளில், நமக்கு இடம் கிடைக்குமானால், அந்த பயங்கரமான காரியங்களைக் குறித்து - இப்பூமியில் ஊற்றப்படவிருக்கும் கலசங்களைக் குறித்தும், ஏழு இடிமுழக்கங்களைக் குறித்தும் நாம் பேசலாம்... பூமியில் வரப்போகும் அந்த பயங்கரமான காட்சிகள். இன்றுள்ள ஜனங்கள் நரம்பு தளர்ச்சி கொண்ட நிலையில் இருக்கின்றனர். முழு உலகமே..

20. சென்ற மாதத்தின் "ரீடர்ஸ் டைஜஸ்ட்' (Readers Digest) பத்திரிக்கையைப் படித்தீர்களா? அந்தக் கட்டுரையை நீங்கள் கவனித்தீர்களா? அது மகத்தான சுவிசேஷகரான பில்லி கிரகாமைப் பற்றியதாகும். அவர் மிகவும் களைப்புற்றதனால், அவரால் கூட்டங்களை நடத்த முடியவில்லை. உடல் பரிசோதனைக்காக அவர் மேயோ வைத்தியசாலைக்குச் சென்றார். அவருக்கு எவ்வித கோளாறும் இல்லையென்றும், வேண்டிய அளவிற்கு அவர்

வேலை செய்வதில்லை என்றும் கண்டு பிடிக்கப்பட்டது. எனவே அவர்கள் அவருக்கு உடற்பயிற்சி கொடுத்திருக் கின்றனர். தினந்தோறும் அவர் ஒரு மைல் தூரம் ஓடு கின்றார்.

மேலும் சிறு பிள்ளைகள்- பையன் களும் பெண்களும் - இருபது வயதாகும் போதே நடுத்தர வயதினை இப்பொழுது அடைந்து விடுகின்றனர் என்றும், அநேக பெண்களுக்கு இருபத்தைந்து வயதாகும் போதே ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு அவர் களுக்கு நின்றுவிடுகின்றது என்றும் விஞ்ஞானம் நிரூபித்துள்ளதாக அக்கட்டுரை கூறுகின்றது.

உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, சில நாட்களுக்கு முன்பு இரவு கூட்டம் ஒன்றில் பரிசுத்த ஆவியானவர் பெயர் சொல்லி அழைத்துக் கொண்டிருந்தபோது, அங்கு ஒரு பெண் உட்கார்ந்துக்

கொண்டிருந்தாள். பரிசுத்த ஆவியானவர் அவளை அழைத்தபோது, அதுதான் அவளில் காணப்பட்ட கோளாறாக இருந்தது. அவளை இரண்டாம் முறை நான் பார்த்தபோது, காரியம் என்னவென்று கண்டுகொண்டேன். ஆயினும், "அப்படி இருக்க முடியாது; அந்த பெண் மிகவும் சிறியவளாயிருக்கிறாளே" என்று மனதில் எண்ணினேன். அவளுக்கு இருபது, இருபத்து மூன்று வயது இருக்கும். பாருங்கள்?

21. என் தாயாரும் உங்கள் தாயாரும் நாற்பத்தைந்து, ஐம்பது வயதில்தான் அந்த பருவம் அடைந்தனர். என் மனைவி முப்பத்தைந்து வயதில் அதை அடைந் தாள். தற்பொழுது அது இருபது வயதுக்கு வந்துள்ளது. ஜன சமுதாயம் முழுவதுமே அழுகின நிலையில் உள்ளது. கலப்பட முள்ள உணவை நாம் உண்பதனால் நம்முடைய சரீரம் இப்படி கெட்டுவிடு

கின்றது. இறுக்கம் (Tension) அதனை இன்னும் அழுகச்செய்கின்றது. அப்படி யிருக்க அது நமது மூளை அணுக்களையும் (Brain cells) கூட அழுகச் செய்யுமல்லவா? அதனால் தான் பெண்கள் தெருக்களில் நிர்வாணமாய் நடப்பதையும், ஜனங்கள் நூற்றிருபது மைல் வேகத்தில் காரோட்டி செல்வதையும் நாம் இப்பொழுது காண்கிறோம். முழு நாட்டிற்கும் - இல்லை முழு உலகிற்குமே - மூளைக் கோளாறு ஏற்பட்டுள்ளது என்னும் நிலையை அது அடைந்து விட்டது.

22. **கர்த்தருக்குச் சித்தமானால், நாம் ஏழு கலசங்களின் இரகசியங்களை திறந்து, பயங்கரமான காரியங்களைக் காண்பிக்கும் போது - சற்று கழிந்த பின்னர் மனிதன் பைத்திய நிலையையடைவான்.**

அப்பொழுது அவன் எறும்புகளை மலை அளவுக்கு பெரிதாகக் காண்பதாக கற்பனை செய்து கொள்வான்.

நீண்ட கூந்தலைக் கொண்ட வெட்டுக் கிளிகள் பூமியில் தோன்றி (வெளி. 9:8). கூந்தலைக் கத்தரித்துள்ள ஸ்திரீகளை துன்பப்படுத்தும்- அவைகளுக்கு ஸ்திரீக ளைப் போல் நீண்ட கூந்தல் தொங்கிக் கொண்டிருக்கும்; அவைகளுக்கு சிங்கத் தைப் போல் நீண்ட பற்களும், அவைகளின் வாலில் தேள்களைப் போல் கொடுக்கும் இருக்கும்.

அவை மனிதரை இப்பூமியில் வேதனைப் படுத்தும்.

அப்பொழுது எதையும் செய்யமுடியாத படிக்கு காலதாமதமாகியிருக்கும். உங்களுக் குப் புரிகின்றதா? பாருங்கள்? வேதனைப் படுத்தும்...

# கடைசிகால தீர்க்கதரிசனங்கள்



1

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து